**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**MCOP.No.293/ 2022**
**வழக்கு சாட்சி PW.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.என்.வி.அமுதா அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மாரியம்மாள் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் | : மகாலிங்கம் | கணவர் பெயர் | : முருகானந்தம் |
| கிராமம் | : விருப்பாட்சி | வயது | : சுமார் 39 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 13.08.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**1–வது எதிர்மனுதாரர் தப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை :**

1வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை மேற்கொள்ளவில்லை. குறுக்கு விசாரணை முடிக்கும்படி குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2வது எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்குரைஞருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டு ஆட்சேபிக்கப்பட்டுள்ளது. குறிப்பாணை பதிவு செய்யப்படுகிறது.

**2–வது எதிர்மனுதாரர் தப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை :**

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் கண்டுள்ள விபரங்கள் எனக்கு முழுமையாக தெரியும் என்றால் ? சரிதான். இறந்துபோன எனது கணவர் முருகானந்தத்திற்கு சொந்தமான TN 42 K 0121 வாகனத்தின் பதிவு சான்று மற்றும் காப்பீட்டு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ–9 ஆவணத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கு எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் ? சரிதான். காப்பீடு இல்லாமலும், ஓட்டுநர் உரிமம் இல்லாமலும் எனது கணவர் தான் இருசக்கர வாகனத்தை பொதுச்சாலையில் இயக்கி இந்த விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் ? சரியல்ல. அதனால் தான் மாதிரி வரைபடம் மற்றும் குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ? சரியல்ல. இந்த விபத்து எனது கணவரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் ? சரியல்ல. எனது கணவர் அதிவேகமாக இருசக்கர வாகனத்தை இயக்கி விபத்தை

ஏற்படுத்திவிட்டார் என்றால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ விடுப்பு சான்றிதழ் ம.சா.ஆ-7 ஆவணத்தில் சக்கரை வியாதி இருந்ததாகவும், அவரது இறப்பிற்கு காரணம் Heperkalemia and metabolic acidosis induced cardiac arrest in a case of RTA with head injury என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ? ஆங்கிலம் எனக்கு தெரியாது. அதனால் அதில் என்ன உள்ளது என்று என்னால் சொல்ல முடியவில்லை. நான் சொல்வது பொய் என்றாலும், ம.சா.ஆ.7 ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ள நிலையில் அதில் உள்ள சங்கதிகளை நான் தான் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ-3 சடலக்கூறாய்வு சான்றின் படி தலைக்காயத்தால் உயிர் இழப்பு ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் எனது கணவர் ஹெல்மெட் அணிந்திருந்தால் தலைக்காயம் ஏற்பட்டு இருக்க வாய்ப்பு இல்லை என்றாலும், இறப்பை தவிர்த்திருக்கலாம் என்றாலும் ? சரியல்ல. ஹெல்மெட் போட்டு இருந்தார். நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கை மற்றும் இதர ஆவணங்களில் எனது கணவர் ஹெல்மெட் அணிந்திருந்ததாக எந்த குறிப்பும் இல்லை என்று சொன்னால் ? சரியல்ல. எனது கணவர் N.P.Kபழக்கடையில் ஓட்டுநராக பணிபுரிந்து மாதம் 18,000 சம்பாதித்து வந்ததாக சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் ? தினக்கூலி தான். அதனால் சான்று எதுவும் தாக்கல் செய்ய இயலவில்லை. 1-ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு விபத்து ஏற்பட்ட சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும், பாலிசி விதிமீறல் உள்ளதால் மோட்டார் வாகன சட்டப்படி 2-ம் எதிர்மனுதாரர் எந்தவிதமான இழப்பீடும் செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றால் ? சரியல்ல. நான் கேட்டுள்ள தொகை எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.08.13 19:28:59 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்